

Vol.26 | No. 7 | July 2022

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

## St. Mary's Minor Seminary Academic Year Inauguration

25.06.2022










Catechetical Year, Ianauguration
Diocesan Level, 04.06.2022
Parish Level, 05.06.2022



THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 26 No :7 JULY 2022



# இறையருள்
# IRAIARUL

## Editorial Board

Patron
**His Excellency**
**Mar George Rajendran SDB**
Chief Editor
**Fr. Joseph Santhosh**
Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Iyathurai**
**Mr. Jesin Joseph**
Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Jesin J Joseph**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| உயர் பேராயர் - திருமுகம் | 06 |
| மறைக்கல்வி | 10 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 13 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 14 |
| இல்வாழ்வு இயக்கம் | 16 |
| வின்செண்ட்-தே-பவுல் சபை | 18 |
| சமூக சேவை சங்கம் (KKSSS) | 20 |
| அருட்சகோதரர்களிடமிருந்து | 23 |
| மறைமாவட்ட செய்திகள் | 25 |
| மறைவட்ட செய்திகள் | 28 |
| Birthdays and Feastdays of Fathers | 34 |
| Bishop's Engagements | 35 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/135/2022**

**30 June 2022**

**Dear Readers,**

Greetings from Bishop's House, Thuckalay!

On 28 July we celebrate the feast of St Alphonsa. Her life here on earth was a process like falling of grain of wheat into the earth and dying. She is the first saint of the Syro-Malabar Church and she is enshrined as a model for taking up our daily crosses and following Jesus Christ so closely.

Born as a premature baby in the 8th month of pregnancy Annakutty was the childhood name of St Alphonsa. Mother died three months after her birth Annakutty was entrusted to the care of her mother's sister. The family played a key role in her faith formation through the prevalent practices of regular evening prayers, observance of weekly fasting and participation in the Eucharistic celebration. Annakutty developed a personal devotion and love for Christ. Jesus Christ began to become a concrete personal relational reality for her.

The earthly life of St Alphonsa reminds us of the words of St Paul. "The mystery which was hidden for ages and generations, but now made manifest to his saints. The mystery is that Christ, the hope of glory is there in you" (Colossians 1: 27). St John begins his Gospel with the assertion that 'The Word was God'. In one of his parables, Jesus illustrates that the Word of God is a seed. Now, St Paul in his letter to Colossians writes that Christ, the hope of glory, is in you. Hence, without any shadow of a doubt, it is obvious that every individual on earth bears a seed of Christ within him or her.

St Alphonsa's life shows that she aware of the seed of Christ that was residing in her. It is because of this conviction that she allowed the divine seed of purity get sprouted. When her life was permeated with the power of the Holy Spirit, she entered through the narrow gateway offered by Jesus. Following the words of John the Baptist, she believed that "Christ alone was growing in her and her self was being reduced."

Each one of us has a seed of Christ in us. Do we let the divine seed in us grow? We have a seed of Christ within us and since we are not committed enough to cater for it, the seed dies out, before it gets sprouted. Is not our carelessness? Now is the time to pray through the intercession of St Alphonsa to be endowed with the grace of catering for the seed of divinity that has been infused by the Almighty at the time of our birth. St Alphonsa certainly can guide each one of us through the narrow and suffering moments of life.

From early in her life, Sister Alphonsa experienced great suffering She did not want to get married and chose to be a nun in life. She burnt her leg in a live ash-pit to prove her wish to follow Christ and to turn away suitors. At 17, she entered the convent to become a nun and adopted the name Alphonsa. At 21, she was affected with heavy bleeding. Though she was appointed as a temporary teacher in a primary school she could not continue due to severe illness.

St Alphonsa suffered from malaria and tuberculosis and ulcer. A robber attacked her at night and left her bleeding and upset. She suffered pain all her life in bed and offered it to Jesus Christ. Some doubted her piety. She believed she was entrusted with a part of the cross of Christ. The illness became a regular visitor of Sr Alphonsa. She was bedridden and was not able to walk. Yet she prayed incessantly and was cheerful.

The life of St Alphonsa will be ever remembered as the one which accepted the life without any rebellion as it was offered to her.

No one will find her saying even a word of complaint about the long-lasted trials, hardships and sufferings of her religious life. She was well prepared to accept the life her creator has designed for her. Hence, an inspiring lesson that we could draw out from her life is that there are always the hands of God behind every experience of life.

No one has succeeded in answering the perennial question of suffering. But, St Alphonsa teaches us that God has a right over our lives. God has a reason for allowing something to happen in our lives and finally, He has prepared a reward for each one of us. "God works for the good with those who love him" (Rom. 8: 28). The one who knows all the ways of our lives, the one who keeps the keys of all the lockers, the one who has solutions for all the problems has an answer.

St Alphonsa teaches us about the price that we need to pay for being a true disciple of Jesus Christ. The pains, the struggles and the discipline that we undertake are the prices that we need to pay to be a disciple of Jesus Christ. A well-solid grounded life in Jesus Christ costs a lot. The pains and struggles of life are always something like shedding blood. Still, it is better to choose Jesus always.

Towards the end of the journey of her life, St Alphonsa was able to say: "I feel that the Lord has destined me to be an oblation, a sacrifice of suffering... I consider a day in which I have not suffered as a day lost to me." With this attitude of a victim for the love of the Lord, happy until the final moment and with a smile of innocence always on her lips, Sister Alphonsa quietly and joyfully brought her earthly journey to a close at an early age of 35.

The prophetic words of Fr Romulus, Spiritual Director, at her funeral, are coming true: "The village of Bharananganam within whose bounds this body will be buried is also greatly blessed for, God willing, this sleepy little village will become the Lisieux of India. Sr Alphonsa's tomb here will become a centre of pilgrimage and people will come here from all parts of India to pray to

her seeking her intercession. Bishops no doubt, and cardinals themselves if God is so pleased, will visit her tomb though she is an obscure nun now."

Let us make the prayer of St Alphonsa our own: "O Lord Jesus, hide me in the wound of your sacred heart. Free me from my desire to be loved and esteemed. Guard me against my evil attempts to win fame and honour. Make me humble till I become a small spark in the flame of love in your Sacred Heart. Grant me the grace to forget myself and all worldly things. Jesus, sweet beyond words, convert all worldly consolations into bitterness for me. O my Jesus, Sun of Justice, enlighten my intellect and mind with your sacred rays. Purify my heart, consume me with burning love for you, and make me one with you. Amen."

As we are preparing to celebrate the feast of St Alphonsa, let us emulate some of the important virtues that she excelled in – her attitude towards suffering and her life of prayer. May St Alphonsa intercede for each one of us! May she pray for our Church that is going through many trials and difficulties!

On 3 July we celebrate Dukhrana, the feast of St Thomas. It is an important feast for us as we belong to the Syro-Malabar Church. The doubt of St Thomas after the resurrection of Jesus became a moment of solid belief: "My Lord and my God!" (John 20:28). His encounter with Jesus teaches us how the right response to doubt - curiosity and searching - can lead to deep belief. May we increase our faith in Jesus as we carry out various ministries that we are engaged in. Let us lead our brothers and sisters entrusted to our care to have a deeper encounter with the Lord!

Yours in Christ Jesus,

† George Rajendran SDB
Bishop of Thuckalay

**George Cardinal Alencherry**
**Major Archbishop**
**Syro-Malabar Church**

**Prot. No. 0594/ 2022**

## சீரோ மலபார் திருச்சபையின் தலைவர் கர்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி தனது உடன் பணியாளர்களான பேராயர்களுக்கும் ஆயர்களுக்கும் அருட்பணியாளர்களுக்கும் துறவறத்தாருக்கும் தனது மேய்ப்பு பணியின் கீழ்தரப்பட்டுள்ள எல்லா இறைமக்களுக்கும் எழுதுவதாவது, ஆண்டவரின் அருள் உங்களோடு இருப்பதாக

ஈசோ மெசியாவில் அன்பார்ந்த சகோதரர் சகோதரிகளே

மார்த்தோமாவின் நினைவு நாளான ஜூலை 3 ஆம் தேதியை ஒட்டி உங்களோடு இக்கடிதம் வழியாக உறவாடுவதில் மிக்க மகிழ்கிறேன். ஜூலை 3 ஆனது, துக்ரானாத் திருநாள் என அறியப்படுவதோடு, அந்நாள் சீரோ மலபார் சபை நாள் எனவும் பெயரிடப்பட்டு அனுசரிக்கப்படுகிறது. "நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!" என உறுதியாய் மொழிந்த, மார்த்தோமாவின் நம்பிக்கையின் ஒளிச்சுடர் நம் உள்ளங்களிலும் மங்காது சுடர்விட வேண்டும் என்னும் நோக்குடன் இச்சபைநாளானது அனுசரிக்கப்படுகிறது. அதற்குத் துணைப்புரியும் நிகழ்வுகள், பங்கு-மறைமாவட்ட-சபைத் தளங்களில் ஏற்பாடு செய்யப்பட்டு வரப்படுகிறது.

இவ்வாண்டைய சபைநாளுக்கெனத் தனிச்சிறப்பு உண்டு. மார்த்தோமா இரத்தசாட்சியாக உயிர் துறந்ததன் 1950 ஆம் ஆண்டு நினைவை நாம் அனுசரிக்கிறோம். உயித்தெழுந்த இயேசுவை தரிசித்த திருத்தூதர்கள் விசுவாசத்தில் உறுதிப் பெற்றார்கள். அத்தோடு, அவர்களே அவ்விசுவாசத்தின் சாட்சிகளாகவும் மாறினர். மூவாயிரம் ஆண்டின் தொடக்கத்தில் வாழ்ந்து வரும் நாமும், காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப பெற்றுக் கொண்ட நம்பிக்கையை பறைசாற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். கிறிஸ்துவின் மீது வைக்கும் நம்பிக்கையானது; தனிமனிதரின் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கமானது ஆழமானதாக இருப்பதோடு, அஃது தூய ஆவியாரின் கனிகளை வாழ்வில் விளைவிப்பதாகவும் இருக்கும். கிறிஸ்துவின் மீது

நம்பிக்கைக் கொண்டவர்கள், சமூகத்தில் நிலவும் வன்கொடுமைகளையும், மூட நம்பிக்கைகளையும் களைந்தெறியும் வண்ணமான புரட்சிகளைச் செய்திருக்கிறார்கள் என்பதை திருச்சபையின் வரலாறு நமக்குக் கற்பிக்கிறது. கிறிஸ்தவ நற்செய்திப் பணியாளர்கள் இந்தியாவில் ஏற்படுத்திய சமூக மாற்றங்களைப் பற்றி நாம் அறியாதவர்கள் அல்லர். தீவிரமுடன் நற்செய்திக்குச் சான்றுப் பகிர்ந்த ஏராளமான நற்செய்திப் பணியாளர்களை இந்தியா கண்டிருக்கிறது. சமீபத்தில் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்ட தேவசகாயம் பிள்ளை அவர்களும், சமூகத்தில் நிலவிய தீமைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்ததால்தான் கொல்லப்பட்டார். சாதி மதங்களைத் தாண்டி வறியோருக்கும், துன்புறுவோருக்கும் சேவைகள் புரிவதில் ஆர்வம் கொள்வோம். அதுவே கிறிஸ்துவின் அன்பிற்கும் இரக்கத்திற்கும் சாட்சியம் அளிக்கும் உயர்ந்த பணியாக இருக்கும். பிற மதங்கள் மற்றும் பண்பாட்டுச் சமூகங்களுடன் தோழமை பாராட்டுவோம். அனைவரையும் இரக்கத்தோடும் பரிவோடும் கண்டுணர்ந்து, சேர்ந்து வாழும் கலையில் தேர்ச்சிப் பெறுவோம்.

கிறிஸ்துவின் மீது நம்பிக்கைக் கொண்டவர்களை குறிவைத்துத் துன்புறுத்தும் நாடுகள் இன்றும் உள்ளன. இந்திய மண்ணில், ஆட்சியில் இருப்போர் மதத் துன்புறுத்தல்கள் மேலோங்காதிருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அவைத் தொய்வின்றித் தொடர்ந்திட; தொடர்ந்து இறைவனை வேண்டுவோம். குறுகிய மனப்பான்மை கொண்டவர்களாய் பிரிவினை எண்ணங்களுடன் செயல்படுவோரை மனிதம் பேணும் விசாலமான மனநிலையின் பால் ஈர்த்திட ஆவன செய்வோம். நாட்டைக் கட்டியெழுப்பும் முயற்சிகளில் கவனம் வைக்கும் நல்ல குடிமக்களாக உயர்வோம்.

சீரோ மலபார்த் திருஅவையைப் பொறுத்தவரை, கேரளாவில் இருக்கும் மறைமாவட்டங்கள் தாய்த் திருஅவையாகப் பார்க்கப்படுகிறது. இத்தாய்த் திருஅவையானது, கேரளாவிற்கு வெளியேயும் பிற நாடுகளிலும் செயல்பட்டு வரும் திருஅவை சமூகங்களின் வளர்ச்சிக்காக இடையறாது பாடுபட வேண்டும். கிறிஸ்துவின் அன்பு மற்றும் இரக்கத்தை போதிப்பதும், அதற்கு சான்று பகிர்வதுமே உண்மையான நற்செய்திப் பணி. அதற்குத் துணை நிற்கும் செயல்பாடுகளில் தயங்காது ஈடுபடுவோம். நற்செய்திப் பணிகளுக்கு மனதாலும் உடலாலும் துணை நிற்க நாம் தயாராக இருக்க வேண்டும். இத்தகையச் செயல்பாடு வழியாக, கிறிஸ்துவின் உலகளாவிய அன்பிற்கு சாட்சியம் அளித்திட இயலும்.

விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டுள்ள நமது மக்கள், சந்திக்கும் சிக்கல்களுக்கு தீர்வு காண வேண்டியது காலத்தின் கட்டாயம். விவசாயிகளும், அமைப்புச்சாரா தொழிலாளர்களும் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றப் பாடுபடுகிறார்கள். அமைப்புசார்ந்த பணியாளர்கள் தங்களுடைய பாதுகாப்பை உறுதி செய்யப் போராடி உதவிகளைப் பெறுகையில், சாதாரணக் கூலித் தொழிலாளர்களோ அரசாலும் அரசு அலுவலர்களாலும் புறக்கணிக்கப்படுகிறார்கள். இயற்கைப் பேரழிவு மற்றும் காட்டு விலங்குகளின் தாக்குதல் போன்றவை விவசாயிகளின் நிலையை பரிதாப நிலைக்கு தள்ளியிருக்கிறது. விளைப்பொருட்களுக்கு நியாயமான விலையை உறுதிச் செய்யவும், அதன் வழியாக நிரந்தரமான வருமானத்தை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவும் மாறி மாறி வரும் அரசுகளால் இயலவில்லை என்பதே நிதர்சனம். விவசாயிகள் மற்றும் கூலித்தொழிலாளர்களின் நலனில் அக்கறைக் கொள்வோம்.

2023 ஆம் ஆண்டு உரோமையில் நடைபெற இருக்கும் ஆயர் பேரவையின் பகுதியாக, நாடுகள், கண்டங்கள் வாரியாக கருத்துச் சேகரிப்பும் விவாதங்களும் நடந்து வருகிறது. நம்முடைய திருஅவையின் கீழ் வரும் மறைமாவட்டங்களில், ஆயர் பேரவையின் மையக்கருத்தைப் பற்றிய விவாதம் நடந்து வருகிறது. மறைமாவட்டங்கள் மற்றும் துறவற சமூகங்களிடமிருந்து சேகரிக்கப்படும் தரவுகள் அனைத்தும், 2022 ஆகஸ்ட் மாதம் நடக்கும் சீரோ மலபார் ஆயர்ப் பேரவையின் போது விவாதத்திற்கு எடுக்கப்படும். பின்னர் அவை கோர்வையாக்கப்பட்டு, சீரோ மலபார்த் திருஅவையின் கருத்துக்களாக உரோமைக்கு அனுப்பி வைக்கப்படும். ஒன்றிப்பும் பங்கேற்பும் பொறுப்பும் மிக்க திருஅவை சமூகமாக உயர்ந்திட இவ்விவாதங்கள் நமக்கு உதவும் என்பதில் ஐயமில்லை .

நமது திருஅவையானது தனது அமைப்பால் பேரவைத் தன்மையுடையது. அத்தோடு, உலகளாவிய திருஅவை முன்வைக்கும் கூட்டொருங்கியக்கம், நமது நற்செய்திப் பணி மற்றும் மேய்ப்புப்பணி சார்ந்த எல்லாத் துறைகளிலும் மேலோங்கி நிற்க முயற்சிகளை மேற்கொள்வோம். திருஅவை இயல்பால் சமூகமாக இருக்கிறது. இச்சமூகம் பங்கேற்பின் வழியாக அவ்வியல்பை அன்றாடம் புதுப்பிக்கிறது. நம்முடைய திருஅவையின் எல்லாத்தளங்களிலும் பங்கேற்பை உறுதி செய்வோம். அனைத்துச் செயல்பாடுகளும் நற்செய்திப்பணி என்னும் ஒற்றை இலக்கைக் கொண்டதாக இருக்க உறுதி கொள்வோம். இவ்வாறாக, ஒன்றிப்பு, பங்கேற்பு, நற்செய்திப்பணி என்னும் மூன்று துணைக்கருத்துக்களை ஒருங்கிணைத்து,

இணைந்துப் பயணிக்கும் திருஅவையை உருவாக்கிட திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு விடுக்கிறார்.

இத்திருஅவை நாளில், திருஅவை மாந்தர்களான, ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவியர், ஆண் பெண் பொதுநிலையினர் என அனைவருக்கும் திருத்தூதர் தோமாவின் துக்ரானாத் திருநாளின் வாழ்த்துக்களையும், சபைசமூகத்தின் அன்பு மற்றும் ஒன்றிப்பின் வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன்.

காக்கனாடு மவுண்ட் சென்ட் தோமஸில் செயல்படும், உயர் பேராய தலைமைச்செயலகதிலிருந்து ஜூன் 14, 2022 அன்று வெளியிடப்பட்டது.

ஜார்ஜ் கார்டினல் ஆலஞ்சேரி

சீரோ மலபார்த் திருச்சபையின் உயர் பேராயர்

---

இம்மடலானது, ஜூன் 26, 2022 அன்று திருப்பலிக்கிடையே அனைத்து பங்குகளிலும், சிற்றாலயங்களிலும் வாசிக்க வேண்டும்.

---

# Curia News

Eparchy of Thuckalay

**Forane Directors of the Departments - 2022**

| | **CML** | **Catechism** | **Youth** |
|---|---|---|---|
| Director | *Fr. Printo Kurias* | *Fr. Abilash Xavier Raj* | *Fr. Joseph Santhosh* |
| **Arukani** | Fr. Martin MST | Fr. Martin MST | Fr. Toji Parambilparambil |
| **Kaliyal** | Fr. Tinu CMI | Fr. Luka CMI | Fr. Ajeesh Attiyil |
| **Manjalumoodu** | Fr. Anto CMI | Fr. Shijo | Fr. Robin Jose |
| **Nithravilai** | Fr. Printo Kurias | Fr. Anil Raj | Fr. Robins Kuzhikodil |
| **Padanthalumoodu** | Fr. Mahesh | Fr. Mahesh | Fr. Sumesh |
| **Soosaipuram** | Fr. John Paul | Fr. Antony Jose | Fr. Kochumon |
| **Tkly-Pilankalai** | Fr. Toji Sebastian | Fr. Ajin Jose | Fr. T. Thekkethala CMI |
| Thenkasi | | | |
| | | | |




"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

**"மறைநூல் அனைத்தும் கடவுளின் தூண்டுதல் பெற்றுள்ளது. அது கற்பிப்பதற்கும் கண்டிப்பதற்கும் சீராக்குவதற்கும் நேர்மையாக வாழப் பயிற்றுவிப்பதற்கும் பயனுள்ளது" (2 திமொ 3: 16).**

**அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துகள்.**

***விவிலிய பயிற்சி விழா - VPV 2021-2022:***

மறைக்கல்வி மாணவர்கள் விவிலியத்தைப் பற்றி ஆழமாக அறியவும்,





இறைவார்த்தையை மனப்பாடம் செய்யவும், அதன் வழி வாழ பயிற்சி அளிப்பதற்குமாக எல்லா வருடமும் பள்ளி விடுமுறை நாட்களில், விசுவாசப் பயிற்சி விழா, நற்செய்தி நிலையம் சார்பாக நடத்தப்பட்டு வருகிறது. கொரோனா பாதிப்பின் காரணத்தால், இது கடந்த இரண்டு ஆண்டுகளில், இணையம் வழியாக மேற்கொள்ளப்பட்டது. இவ்வருடம் மாணவர்கள் நேரடியாக பங்கேற்கும் விதத்தில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. 2022 மே மாதம் 15 முதல் ஜூன் 10 வரையிலான தேதிகளில், ஏழு நாட்கள் பங்குகள் வாரியாக பயிற்சி நடத்த அறிவுறுத்தப்பட்டது. மறைக்கல்வி மாணவர்கள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர்: (Sub-Junior, Junior, Senior, Super-Senior). வகுப்புகள் காலை செபம், திருப்பலி ஆகியவற்றுடன் ஆரம்பமாகி நடைபெற்றன. ஆடல், பாடல், வகுப்புகள், போட்டிகள் என சிறப்பிக்கப்ட்டது.

### *மறைக்கல்வி ஆண்டு தொடக்க விழா மற்றும் தலைமையாசிரியர்கள் கூட்டங்கள்:*

2022-2023 ஆம் மறைக்கல்வி ஆண்டு தொடக்க விழா, தலைமையாசிரியர்கள் பங்கேற்க 2022 ஜூன் 4 அன்று ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் தலைமையில், இயக்குநர் தந்தை அபிலாஷ் சேவியர் முன்னிலையில் நடைபெற்றது. இறைவணக்கப் பாடலைத் தொடர்ந்து அருட்சகோதரி மார்கிரெட் அவர்கள், விவிலியம் வாசித்து செபித்தார். திரு. செபாஸ்டின் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். பின்னர், ஆயர் அவர்கள் குத்துவிளக்கேற்றி மறைக்கல்வி ஆண்டை அதிகாரபூர்வமாகத் தொடங்கி வைத்தார். பங்குவாரியாக, தொடக்க விழா நடத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டதோடு, அதற்கான செபமும் உறுதி மொழியும் அடங்கிய அட்டைகள் வழங்கப்பட்டன. நிகழ்வின் போது, முழுக்கோடு மறைக்கல்வி மாணவர்களின் நடனம், பரைக்கோடு மாணவிகளின் குழுப்பாடல் ஆகியன இடம் பெற்றன. 'நம்பிக்கை வாழ்வின் முதுகெலும்பாகத் திகழ்கிறது' மறைக்கல்வி எனப் பேசிய ஆயர் அவர்கள், மாணவர்களுக்கு அடிப்படை பயிற்சி கொடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதோடு, இறையழைத்தலையும் ஊக்குவிக்கக் கேட்டுக் கொண்டார்.

இயக்குநர் தந்தை அபிலாஷ் சேவியர் ராஜ் அவர்கள் பேசுகையில், இயேசுவைப் பற்றி அறிவதற்கான ஆர்வத்தை குழந்தைகள் மத்தியில் தூண்டி எழுப்ப வேண்டும் என்றும், ஆசிரியர்கள் மறைக்கல்விப் பணியை தொய்வின்றி முழுமையாக முன்னெடுக்க வேண்டும் என்றும் கூறினார். இணை இயக்குநர் அருட்ததந்தை ஜேக்கப் ஐயம்மாத்தற அவர்கள், 2022-2023 மறைக்கல்வி ஆண்டில் நடைமுறைத்தப்பட வேண்டிய செயல்திட்டங்கள் குறித்து விளக்கினார்.

### இரண்டாம் பருவத் தேர்வு

2021-2022 ஆம் மறைக்கல்வி ஆண்டைய 10, 11, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான இரண்டாம் பருவத் தேர்வு, 2022 மே 24 அன்று பிற்பகல் 2 மணிமுதல் 4 மணிவரை ஏழு மறைவட்ட மையங்களிலும் நடத்தப்பட்டது.



### தென்காசி மறைத்தளம்: விவிலிய விசுவாசப் பயிற்சி விழா மற்றும் ஆசிரியர்கள் கூட்டம்



தென்காசி மறைத்தளங்களில் உள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கான, VPV ஜூன் மாதம் தொடக்க வாரத்தில் நடத்தப்பட்டது. இதன் தொடக்கவிழாவானது, 2022 ஜூன் 5 அன்று இயக்குநர் தந்தை அபிலாஷ் சேவியர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து மறைத்தொண்டுத் தளங்களில் பணியாற்றும் மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இயக்குநர் தந்தை முன்னிலை வகித்தார். அருட்தந்தை ஜெஸ்டின் சுதீஷ் அவர்கள் தலைமையேற்றார்.

இப்படிக்கு

அருட்தந்தை அபிலாஷ் சேவியர்
இயக்குநர்

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

***"சிறு பிள்ளைகளை என்னிடம் வர விடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள். ஏனெனில், இறையாட்சி இத்தகையோருக்கே உரியது. இறையாட்சியைச் சிறு பிள்ளையைப்போல் ஏற்றுக் கொள்ளாதோர் அதற்கு உட்படமாட்டார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" [மாற் 10: 14]***

### *ஆண்டு விழா*

குழந்தை ஈசோ இயக்கத்தின் 2022-2023 ஆம் ஆண்டைய செயற்திட்ட தொடக்கவிழா 2022, ஜூன் 4 அன்று மாலை 4 மணிக்கு கல்லுவிளை சீரோ மலபார் இளையோர் இயக்க அலுவலகத்தில் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் தலைமையில், இயக்குநர் தந்தை அனில் ராஜ் முன்னிலையில் நடைபெற்றது. இதில் ஊக்குவிப்பாளர்கள், மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் பங்கேற்றனர்.

விழாவை, ஆயர் அவர்கள் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார். கூட்டத்தின் போது, கடந்த மூன்று ஆண்டுகளாக மறைமாவட்ட குழந்தை ஈசோ இயக்க செயலராக செயலாற்றிய அருட்சகோதரி ஜெனி அவர்களுக்கு நன்றித் தெரிவிக்கப்பட்டு, புதிய செயலர் அருட்சகோதரி பிளஸ்ஸி அவர்களுக்குப் பொன்னாடை அணிவிக்கப்பட்டு வரவேற்பும் அளிக்கப்பட்டது.



அடிப்படைப் நம்பிக்கைப் பயிற்சிகளின் தளமாக இருக்கும் குழந்தை ஈசோ இயக்கத்தை சிறப்புடன் நடத்த ஆயர் அவர்கள் தன் உரையில் கேட்டுக் கொண்டார். இயக்குநர் தந்தை அவர்கள் நடப்பாண்டின் செயல்திட்டங்களைப் பற்றி விளக்கிக் கூறினார். பங்குகளில், குழந்தைகளின் கூட்டத்தை சனிக்கிழமை காலை நடத்த பரிந்துரை வைத்தார். தேநீருடன் கூட்டம் 5.30 மணிக்கு நிறைவுற்றது.

**இப்படிக்கு**
**அருட்தந்தை அனில் ராஜ்**
**இயக்குநர்**

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

***மறைமாவட்ட துறைகளுக்கிடையேயான கூட்டம்:***

2022, ஜூன் மாதம் 23 ஆம் தேதி தக்கலை மறைமாவட்ட துறைகளுக்கிடையேயான கூட்டம் ஆயர் இல்லத்தில் மறைமாவட்ட ஆயர் தலைமையில் நடைபெற்றது. இதில் இளைஞர் இயக்கம் சார்பாக இயக்குனர் அருட்தந்தை ஜோசப் சந்தாஷே அவர்கள் கலந்துகொண்டார். இக்கூட்டத்தில் நடை பெற்று முடிந்த கலைவிழா பற்றி விவாதிக்கப்பட்டது அதேப் போன்று அடுத்து வரக்கூடிய நிகழ்ச்சிகள் பற்றியும் கலந்து ஆலோசிக்கப்பட்டது

***போதை ஒழிப்பு பேரணி மற்றும் பொதுக்கூட்டத்தில் இளையோர் பங்கேற்பு:***

போதை நோய் விழிப்புணர்வு பேரணி மற்றும் பொதுக்கூட்டம் ஜூன் மாதம் 26 ஆம் தேதி குமரி மாவட்ட குழித்துறை, மார்த்தாண்டம் மற்றும் தக்கலை போதை ஒழிப்பு இயக்கங்கள் சார்பாக நடத்தப்பட்டது. பேரணியானது. படந்தாலுமூடு திருஇருதய மறைவட்ட ஆலயத்திலிருந்து




பிற்பகல் 3:30 மணி அளவில் ஆரம்பமானது. 4 மணியளவில் களியக்காவிளை, பேருந்து நிலையம் அருகில் வந்தடைந்தது. பேரணியில் களியக்காவிளை பேரூராட்சி தலைவர் திரு சுரேஷ் அவர்கள் முன்னிலை வகித்தார். மாலை 4 மணி அளவில் களியக்காவிளை பேருந்து நிலையத்தில் பொதுக் கூட்டம் ஆரம்பமானது. கூட்டத்தின் தொடக்கத்தில் தக்கலை

மறைமாவட்ட SMYM இளையோர் போதை விழிப்புணர்வு நடனம் ஆடினர். இதில் புதுவசந்தம் முன்னாள் இயக்குனர் அருட்தந்தை மரிய மார்ட்டின் அவர்கள் கலந்துகொண்டு அறிமுகவுரை வழங்கினார். பின்னர் விடிவெள்ளி போதை நோய் நற்பணி மைய இயக்குனர் அருட்தந்தை ரெக்ஸ் அவர்கள் சிறப்புரையாற்றினார். மார்த்தாண்டம் சமூக சேவை சங்கத்தின் இயக்குனர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்களும் கன்னியாகுமரி சமூகசேவை சங்கத்தின் இயக்குனர் அருட்தந்தை எபி அவர்களும் கலந்துகொண்டு வாழ்த்துரை கூறினார். தக்கலை மறைமாவட்ட SMYM இயக்க தலைவர் மெர்பின் உறுதிமொழி வாசித்தார். குழித்துறை மற்றும் மார்த்தாண்டம் மறைமாவட்ட இளையோர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

இவண்
மெரின் சுஜித், செயலர்

---

# புனித மரியன்னை இளங்குருமடம் – முக்கூட்டுக்கல்

முக்கூட்டுக்கல் புனித மரியன்னை இளம் குருமடத்தின் 2022-2023 ஆம் பயிற்சி ஆண்டு 25.06.2022 அன்று காலை 10 மணிக்கு திருப்பலியுடன் தொடங்கியது. தொடர்ந்து பகல் 12 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஆயர் அவர்கள் திருப்பலியை நிறைவேற்றியதோடு, கூட்டத்திற்கும் தலைமை தாங்கினார். பயிற்சி அளிக்கும் அருட்தந்தையர்களும், மஞ்சாலுமூடு மறைவட்டப் பங்குத்தந்தை அகஸ்டின் தலோடில் அவர்களும் கூட்டத்தில் பங்கேற்றனர். (தகவல் சேகரிப்பு, திருமதி செலின் முழுக்கோடு).

மறைமாவட்ட அளவிலான, இறையழைத்தல் முகாம், முக்கூட்டுக்கல் புனித மரியன்னை இளங்குருமடத்தில் வைத்து மே 31 முதல் ஜூன் மாதம் 2 ஆம் தேதி வரை நடைபெற்றது. இதில் நாற்பதற்கும் மேற்பட்ட 8 முதல் 12 வரை படிக்கின்ற மாணவர்கள் கலந்துக் கொண்டனர். இதிலிருந்து புதிதாக 8 பேர் இளங்குருமடத்தில் முதலாம் ஆண்டு பயிற்சி மேற்கொள்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# இல்வாழ்வு இயக்கம்

"“நம்மைச் சந்தித்துவிட்டு செல்ல இயேசு வரவில்லை. மாறாக நம்மோடு குடிகொள்ள வந்தார் என்பதால் அவரிடமிருந்து நம்மை எதனாலும் பிரிக்க முடியாது. நம் மகிழ்வு, துயர்கள், ஏக்கங்கள், அச்சங்கள், நம்பிக்கைகள், கவலைகள் என அனைத்திலும் நம்மோடு பங்குகொள்ள விரும்பும் இறைவனுக்கு நம் இதயங்களைத் திறந்து வைப்போம”

- புனித பிரான்சிஸ் அசிசி

***இல்வாழ்வு இயக்கம்***

திருக்குடும்பத்தை போன்று நமது குடும்பங்களும் மகிழ்ச்சியாய் வாழ வேண்டும் என்ற நோக்குடன் இல்வாழ்வு இயக்கம் செயல்பட்டு வருகிறது.

***இல்வாழ்வு இயக்க உதவி இயக்குநர்***

இல்வாழ்வு இயக்க உதவி இயக்குநருக்கு, இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வைத்து 21-6-2022, பிற்பகல் 3 மணி வரவேற்பு அளிக்கப்பட்டது. மறைமாவட்ட



குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துபறம்பில் தலைமையில் இல்வாழ்வு இயக்க இயக்குநர் தந்தை முன்னிலையில் அருட்சகோதரி புதிய உதவி இயக்குநர் அருட்சகோதரி றோஸ் சீரியங்கண்டத் CHF அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. இக்கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக அதங்கோடு திருக்குடும்ப கன்னியர் இல்லச் சகோதரி பவ்யா CHF அவர்களும் அலுவலக பணியாளர்களும் கலந்து கொண்டனர்.



### ஆற்றுப்படுத்தல் பணி

மன உளைச்சல், மனநல சிக்கல்கள் ஆகியவற்றைப் போக்கும் நோக்குடன் இல்வாழ்வு இயக்கத்தில் வைத்து ஆற்றுப்படுத்தல் நடைபெற்று வருகிறது. இதை அருட்தந்தை மற்றும் அருட்சகோதரி அவர்கள் ஆன்மீக முறையில் ஆலோசனை மற்றும் அறிவுரைகளை வழங்கி குடும்பங்கள் மகிழ்ச்சியாய் வாழ வழிகாட்டி வருகிறார்கள்.

### மாதர் ஜோதிஸ் இயக்கம்

மார்த்தோமா மாத கொண்டாட்டத்தை முன்னிட்டு தாய்மார்களுக்கான மறைமாவட்ட அளவிலான மார்கம்களி போட்டி ஜூலை 9 ம் தேதி பிற்பகல் 2 மணிக்கு ஆசீர் ஆடிட்டோரியம் கல்லுவிளையில் வைத்து நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### திருமண ஆயத்தப்பயிற்சி

திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்பானது ஜூலை 8 மற்றும் 9 தேதிகளில் கல்லுவிளை இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வைத்து நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்**

**இயக்குநர்**




# வின்சென்ட்-தே-பவுல் சபை

***தக்கலை மத்திய சபை***

தக்கலை மத்திய சபையில் வெள்ளி விழாவையொட்டிய "திருவிவிலிய ஒளிச்சுடர்" மறைவட்ட வாரியாக ஒவ்வொரு ஆலயத்திற்கும் எடுத்துச் செல்லப்படுகிறது.

***சிறப்புக் கருத்தரங்கு - மஞ்சாலுமூடு வட்டாரம்***

தக்கலை மத்திய பேரவையின் வெள்ளி விழாவை ஒட்டி கருத்தரங்கு மஞ்சாலுமூடு வட்டார சபையில் 12-6-2022 மதியம் 2.30 மணிக்கு அருட்தந்தை ரோபின் ஜோஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அருட்தந்தை அவர்கள் "வின்செந்தியசபையில் இளைஞர்களை சேர்ப்பதற்கான வழிமுறைகள்" குறித்து வட்டார சபை பொறுப்பாளர்களுக்கு சிறப்பாக கருத்துரை வழங்கினார். இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை வட்டாரச் சபைத்தலைவர் சகோ. ஜார்ஜ் மற்றும் இளைஞர் பிரதிநிதி சகோ. ஜினோ ஆகியோர் ஏற்பாடுச் செய்தனர்.

***சிறப்புக் கருத்தரங்கு - சூசைபுரம் வட்டாரம்***

தக்கலை மத்திய பேரவையின் வெள்ளி விழாவையொட்டிய "இளையோர் கருத்தரங்கு" சூசைபுரம் வட்டார சபையில் ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை.



ஆன்றணி ஜோஸ் அடிகளார் தலைமையில் 26.06.2022 அன்று நடைபெற்றது. அருட்தந்தை மைக்கேல் ஆரோக்கியசாமி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு இளையோருக்கு கருத்துரை வழங்கினார். இந்நிகழ்வில் மத்திய சபை சார்பாக சகோ. எட்வின்சன், வட்டார சபை தலைவர் சகோ. பிரபு, செயலர் சகோ. ஜஸ்டின் மற்றும் 30 க்கும் மேற்பட்ட இளையோர் ஆர்வமுடன் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

***திட்டம் வழங்கும் விழா - ஆறுகாணி வட்டாரம்***

ஆறுகாணி வட்டார சபைக்குட்பட்ட திருக்குடும்ப ஆலயத்தில் செயல் பட்டுவரும் குழந்தை தெரசாள் கிளை சபையின் சார்பில் 17 வது திட்டம் வழங்கும் விழா 12 -6-2022 அன்று மதியம் 2.30 மணியளவில் ஆலய வளாகத்தில் வைத்து நடைபெற்றது. பத்து நபர்களுக்கு ரூபாய் 7500 வீதம் வழங்கப்பட்டது. நிகழ்வின் போது, சகோதரி பிளாரன்ஸ் அனைவரையும் வரவேற்று பேசினார். வட்டார ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை டோஜி பறம்பில்பறம்பில் நிகழ்வில் கலந்து கொண்டு ஆன்மீக உரை வழங்கி அனைவரையும் ஆசீர் வதித்தார். வட்டார சபை தலைவர் சகோ எபி தோமஸ் திட்டத்தின் செயல்முறை பற்றி பேசினார். சகோதரி சின்னம்மா நன்றி கூற கூட்டம் இனிதே முடிவடைந்தது.

தகவல் சேகரிப்பு
D. P. ஷாஜி
தகவல் தொடர்பு அலுவலர்

---

## திருவழிபாட்டு நூல்கள் மொழியாக்கக் குழு கூட்டம்

திருவழிபாட்டு நூல்களை மொழியாக்கம் செய்யும் குழுவின் கூட்டமானது, ஜூன் 3, 2022 அன்று இணையம் வழியாக நடைபெற்றது. இதில் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன், குருகுலமுதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பவத்துப்பறம்பில், அருட்தந்தையர் சத்தியநேசன், ஜெஸ்டின் செறுவேலில், டென்சி முண்டுநடைக்கல், ஜோசப் சந்தோஷ், ஜோஸ் முட்டத்துப்பாடம் ஆகியோர் பங்கேற்றனர். புதிப்பிக்கப்பட்ட திருப்பலி நூல் மொழியாக்கம் செய்வது பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

# கன்னியாகுமரி
# சமூக சேவை சங்கம்

*SPARK 2022*

ஏழை மாணவர்களின் கல்வி தரத்தை உயர்த்தும் நோக்கில் KKSSS சார்பில் நடத்தப்படும் EDUCARE - மாணவர்களுக்கான கோடைக்கால முகாம் - சங்கமத்தில் வைத்து, SPARK 2022 எனும் தலைப்பில் மே மாதம் 29 முதல் - ஜூன் 7 வரை 10 நாள்கள் நடைபெற்றது. நிகழ்வை KKSSS இயக்குநர்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் தொடங்கி வைத்தார். எல்லா நாட்களிலும் காலை ஜெபமாலை மற்றும் திருப்பலி நடைப்பெற்றன. முகாம் நடத்துவதற்காக முனைவர். அமல்ராஜ் மற்றும் முனைவர் ஜெரோம் வந்திருந்தனர். முகாமில் மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் தெளிவாக பேசவும் பிழையில்லாமல் எழுதவும் பயிற்சி வழங்கப்பட்டது. மாணவர்களின் வளர்ச்சிக்கு உதவுகின்ற விளையாட்டு கல்வியும் வழங்கப்பட்டது. பேச்சுத் திறமை, ஆளுமைத் திறமை, தலைமைத்துவப் பண்பு ஆகியவை வளர்த்துவதற்கான பயிற்சி வகுப்பு வழங்கப்பட்டது.

Camp Fire - ம் போன்ற புதுமையான நிகழ்ச்சிகள் மாணவர்களை மகிழ்ச்சியின்



வெள்ளத்தில் ஆழ்த்தின. முகாமின் நிறைவு விழா தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக MIDS இயக்குநர் அருட்தந்தை ஜாண் குமார் அவர்கள் வருகை புரிந்தார். இதில் சுமார் 55 மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர். இதன் செயல்பாடுகளை Educare ஒருங்கிணைப்பாளர் Sr. மெரின் அவர்கள் ஏற்பாடு செய்தார்கள்.

கிராம முன்னேற்ற விழிப்புணர்வு முகாம் கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் மற்றும் ஜோசப் கல்லூரி முதுநிலை சமூகப்பணித்துறை மாணவர்கள் இணைந்து ஒருநூறாம் வயலில் வைத்து, கிராம முன்னேற்ற விழிப்புணர்வு என்னும் பெயரில் 24-06-2022 அன்று நடைபெற்றது.

சமூக பணித்துறை மாணவர்கள் இரண்டு குழுக்களாக பிரிந்து வீடுகள் கணக்கெடுப்பு நடத்தினர். சாலை, மருத்துவம், குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் குறித்த தரவுகள் சேகரிக்கப்பட்டன. மலைவாழ் மக்களின் வளர்ச்சிக்கு KKSSS ஆனது தேனீ, மாடு வளர்தல் மற்றும் ஆடு வளர்த்தல், குழுசேமிப்பு திட்டங்கள் மற்றும் பல விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்த இருப்பதாக இயக்குநர் தந்தை அவர்கள் தொடக்க நிகழ்வின் போது பேசினார். சமூக பணித்துறை மாணவர்கள் புற்று நோய் பற்றி விழிப்புணர்வு பயிற்சி நடத்தினாகள். இடையிடையே மணவர்களின் கலைநிகழ்சி நடைபெற்றது. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இதனை ஜோசப் கல்லூரி சமூக பணித்துறை மாணவர்கள ஒருங்கிணைத்தார்கள்

### *CTWWC-2 Training*

Changing the way we care CTWWC-2 திட்டமிடல் நிகழ்வு ஜூன் 13 ஆம் தேதி KKSSS அரங்கத்தில் வைத்து நடைபெற்றது. இப்பயிற்சியை CRS திட்ட அலுவலர்கள் திருமதி. ஐஸ்வர்யா TASOSS இன் CTWWC திட்ட அலுவலர்கள் திரு. ஜொரோம் மற்றும் திரு. சேவியர் வழிநடத்தினார்கள். இப்பயிற்சியில் CTWWC எதிர்கால திட்டத்தின் குறிக்கோள் பற்றி விவாதிக்கப்பட்டது. CTWWC திட்ட பணியாளர்கள் 12 நபர்கள் கலந்து கொண்டனர். தக்கலை ரோஜா SHG பார்வையிட்டு குழு பெண்களிடம் குழந்தை வளர்ப்பின் சவால்களை கேட்டறிந்தனர். இதில் KKSSS இயக்குனர் தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் மற்றும் CTWWC பணியாளர்கள் உடன் இருந்தனர்.

### *CTWWC-1*

Changing the way we care திட்டத்தின் CTWWC-1 செயல்பாடுகளின் ஆய்வுக்கூட்டம் KKSSS அரங்கத்தில் வைத்து ஜூன் 10 தேதி நடைபெற்றது. இப்பயிற்சியை TASOSS-ன் CTWwC திட்ட அலுவலர்கள் திரு ஜொரோம் மற்றும் திருமதி டெல்பின் வழிநடத்தினார்கள். இப்பயிற்சியில் CTWWC-1

திட்டத்தின் முந்தைய செயல்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டது. CTWWC-1 திட்டத்தினை திட்ட ஒருங்கிணைப்பாளர் Sr. மெரின் மற்றும் CTWWC திட்ட பணியாளர்கள் விவரித்தனர்.

### *பெற்றோரின் கடமைகள் விழிப்புணர்வு பிரச்சாரம்*

கன்னியாகுமரி சமூக சேவை சங்கமானது குடும்பத்தை வலுப்படுத்தும் பிரச்சாரத்தை ஜூன் மாதம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் நடத்தியது.



இப்பிரச்சாரத்தை CTWWC பணியாளர்கள் வழி நடத்தினார்கள். குடும்பத்தின் முக்கியத்துவம், உறவுகளின் முக்கியத்துவம், குழந்தை வளர்ப்பு, பெற்றோரின் கடமைகள், குடும்பத்தை வலுப்படுத்தல் போன்ற தலைப்புகள் பற்றி விவாதித்தனர். இப்பிரச்சாரம் சுய உதவி குழுக்களில் உள்ள மகளிருக்கு வழங்கப்பட்டது.

### *சர்வதேச பெற்றோர் விழா*

சர்வதேச பெற்றோர் தினத்தை ஜூலை 24 தேதி குமரி மாவட்டத்திலுள்ள 4 மறைமாவட்டங்கள் இணைந்து நடத்தத் தீர்மானித்துள்ளது. இதற்கான ஆய்வு கூட்டம் ஜூன் 30 தேதி KKSSS இயக்குநர் அருட்தந்தை தேமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் கோட்டாறு, குழித்துறை, மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூகப் பணி இயக்குநர்கள் மற்றும் CTWWC திட்ட பணியாளர்கள் 4 நபர்கள் கலந்து கொண்டனர்..

**அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்**

**செயலர்**

# அருட்சகோதரர்களிடமிருந்து

நேற்று என்பது ஒரு வரலாறு, நாளை என்பது ஒரு இரகசியம், ஆனால் இன்று என்பது ஒரு பரிசு, அதனால் தான் அதை நிகழ்காலம் என்கிறோம். எதற்கும் ஒரு புதிய தொடக்கம் இருக்கும்.

அனைத்து அருட்சகோதர்களும் தங்களுடைய விடுமுறைக்கு பிறகு குருமடங்களுக்கு சென்று குருத்துவ பயற்சிகளை மேற்கொள்கின்றார்கள். சகோதரர்கள் படிக்கின்ற அனைத்துக் குருமடங்களிலும் இவ்கல்வியாண்டின் (2022-23) பயிற்சி காலகட்டத்தின் தொடக்க விழா கொண்டாடினார்கள். கொரோனா தொற்றுநோயின் காரணத்தினால் இரண்டு வருடமாக தடைப்பட்டுப்போன மேய்ப்புப்பணி பயற்சி (pastoral ministry) இந்த வருடம் அனைத்து குருமடங்களிலும் துவங்கப்பட்டது. அருட்சகோதரர்கள் மிக ஆர்வத்துடன் அவர்களுடைய பணிகளை செய்து வருகின்றார்கள்.

ஒவ்வொரு குருமடங்களிலும் சீரோ-மலபார், சிரோ-மலங்கரை மற்றும் லத்தீன் சபைகளை சார்ந்த அருட் சகோதரர்களும் பயிற்சி பெறுகின்றார்கள். ஒவ்வொரு சபைகளிலும் வித்தியாசம் இருந்தாலும், அனைத்து சபைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, வளமான அனுபவங்களை அளித்து, ஒருவரையொருவர் அறிந்துகொள்ளும் வாய்ப்பாக இது அமைகிறது.

கத்தோலிக்க திருச்சபையில் கார்பஸ் கிறிஸ்டியின் (நற்கருணை விழா) கொண்டாடப்பட்டது, இந்த விழாவோடு சேர்ந்து அனைத்து குருமடங்களிலும் சிறப்பு கொண்டாட்டமும் நற்கருணை பவனியும் இடம் பெற்றது.

வடவாதூர் புனித தோமஸ் திருத்தூதர் குருமடத்தின் 60 ஆவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. இதில் உயர்பேராயர் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி, மோரன் மோர் பசேலியோஸ் கிளமீஸ் மற்றும் ஆயர்கள் பலர் கலந்து கொண்டனர். நமது மறைமாவட்டத்திலிருந்து அருட்தந்தை தாமஸ் பவத்துபரம்பில், அருட்தந்தை டோஜி பறம்பில்பறம்பில், அருட்தந்தை மேத்யூ குழிஞ்சாலில், அருட்தந்தை எபி பூவத்துமூட்டில், அருட்தந்தை ஜினோய் தொட்டியில், அருட்தந்தை ஜோஸ் புரையிடத்துக்குந்நேல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

உஜ்ஜைன் குருமடத்தில் படிக்கின்ற சகோதரர்கள் விடுமுறை முடிந்து ஜூன் மாதம் 16 ஆம் தேதி குருமடத்திற்குச் சென்றனர். தற்போது அவர்களுக்கான ஒரிங்கிணைப்பு பயிற்சி முகாம் நடந்து வருகின்றன. சகோ. அபிஷ்வின் மற்றும் சகோ. ஜாண் ஆகியோர் சலேசியன் குருமடத்தில் இருந்து 1 கிமீ

தொலைவில் உள்ள பார்வையற்றோர் பள்ளியில் ஞாயிற்றுக் கிழமை ஊழியம் செய்ய தேர்ந்தெடுக்கப்பட்டனர். கேரளா முழுவதும் உள்ள பார்வையற்ற குழந்தைகளுக்கான இந்த பள்ளி ஒரு அருட் தந்தையால் நடத்தப்படுகிறது. சகோதரர்கள் பள்ளியில் சில சிறு சிறு விளையாட்டுக்கள், பாடல்கள் கற்பித்தல் போன்றவற்றை நடத்துகிறார்கள்.

ஜூன் 23 ஆம் தேதி சகோதரர் ஜூபின் தனது இறையியல் படிப்பிற்காக ரோமா புரிக்கு சென்றார். அவருடைய வாழ்க்கை அங்கே நன்றாக அமைவதற்கும் நல்ல முறையில் படிப்பதற்கும் தேவையான ஜெபங்களை கேட்டுக்கொண்டார்.

பூந்தமல்லி தூய இருதய குருமடம் திரு இருதய விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடியது. அருட் தந்தை டோஜி மற்றும் அருட்தந்தை மகேஷ் ஆகியோர் பூந்தமல்லி அருட்சகோதரர்களை சந்தித்தார்கள். அருட் தந்தை டோஜி அவர்கள் சீரோ மலபார் திருப்பலி நிறைவேற்றி அருட் சகோதரர்களுக்காக ஜெபித்தார்.

குன்னோத் நல்லாயன் குருமடத்தில் ஒரு புதிய தேவாலயம் கட்டப்பட்டது. சகோ பிபின் கேஜே மற்றும் சகோ ஆல்வின் ஜான் ஆகியோர் ஸ்காட் கிறிஸ்டியன் கல்லூரியில் தங்களுடைய 3 வருட பட்டப்படிப்பை வெற்றிகரமாக முடித்தனர்.

ஜூன் 22 அன்று அருட்தந்தை மிஜோ அவர்கள் களப்பணி செய்கின்ற சகோதரர்களுக்கு மாத தியானத்தை நடத்தினார். அதன் பிறகு சகோதரர்கள் அருட் தந்தை ஜோஷி குளத்துங்கலுடன் தங்களுடைய அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டர்கள்.

சகோ. லின்டோ மோன்

---

## உயர் பேராயர் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்களுக்கு வரவேற்பு

அருளாளர் தேவசகாயம் பிள்ளை அவர்களை புனிதராக உயர்த்தியதன் நன்றித் திருப்பலியும் விழாவும், ஆரல்வாய்மொழி தேவசகாயம் மலையில் வைத்து 5.6.2022 அன்று நடைபெற இருந்த நிலையில் அதில் பங்கேற்பதற்காக, உயர் பேராயர் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்கள் 4.6.2022 அன்று தக்கலைக்கு வருகை புரிந்தர். அவருக்குச் சிறப்பு வரவேற்பு வழங்கப்பட்டது.

6.6.2022 அன்று உயர் பேராயர் அவர்களை அருட்தந்தையர்கள் சங்கமத்தில் வைத்து சந்தித்தார்கள்.

# மறைமாவட்டச் செய்திகள்

**புனித தோமையார் மாதம் தொடக்கம்**

திருத்தூதர் மார் தோமா மறைசாட்சியாக இறந்ததன் 1950 ஆண்டு நிறைவு விழாவானது, ஒரு மாத காலக் கொண்டாட்டமாக மறைமாவட்ட அளவில் முன்னெடுக்கப்பட இருந்த நிலையில், அதன் தொடக்க விழா, அந்தந்தப் பங்குகளில் ஜூன் 5 ஆம் தேதி ஆரம்பிக்கப்பட்டது. ஆயர் அவர்கள் தொடக்க நிகழ்வை தக்காளிவிளை திருக்குடும்ப ஆலயத்தில் நடத்தினார்.

**புனித தேவசகாயம் பிள்ளை – நன்றித் திருப்பலி, பொதுக்கூட்டம்**

குமரி மாவட்டத்தைச் சேர்ந்த அருளாளர் தேவசாகயம் பிள்ளை புனிதராக உயர்த்தப்பட்டதற்கான தேசிய அளவிலான நன்றித் திருப்பலியும் பொதுக்கூட்டமும் 2022 ஜூன் 5 அன்று ஆரல்வாய்மொழி, காற்றாடி மலையில் வைத்து நடைபெற்றது. பிற்பகல் 2 மணிக்குத் தொடங்கிய திருப்பலிக்கு, இந்தியாவின் உரோமைத் திருப்பீடத் தூதர், லியோப்போல்தோ ஜிரேல்லி தலைமை ஏற்றார்.

**படந்தாலுமூடு மீனச்சலில் புதிய திருத்தொண்டுத்தளம்**

படந்தாலுமூடு பங்கின் பகுதியாக இருந்த மீனச்சல் பகுதியான பங்கிலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலையில் உள்ளது. அங்குள்ள மக்களை ஒருங்கிணைத்து, புனித தோமா திருத்தொண்டுத்தளம், அருட்தந்தை டென்சி முண்டுநடைக்கல் அவர்கள் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது 2022, ஜூன் 5 ஆம் தேதி, பெந்தெக்கோஸ்தே திருநாளின் போது ஆரம்பிக்கப்பட்டது.

**ஆயர் பேராலயம் கட்டுமானக் குழுக் கூட்டம்**

ஆயர் பேராலயம் கட்டுவதற்கான ஆலோசனைக் கூட்டம் ஆயர் அவர்கள் தலைமையில் சூசைபுரத்தில் வைத்து நடைபெற்றது. இதில் ஆயர், குருகுலமுதல்வர், அருட்தந்தையர் அகஸ்டின் தலோடில், ஆன்டணி ஜோஸ், ஜேக்கப் ஐயம்மாத்றா, அஜீஷ் அட்டியில் மற்றும் திரு. பன்னீர் செல்வம் ஆகியோர் பங்கேற்றனர். சூசைபுரத்தில்

அமைய இருக்கும் இவ்வாலயம் கட்டுவதற்கான இடம் குழுவால் பார்வையிடப்பட்டது.

### ▶ தையற்பயிற்சி நிலையம் ஆரியூர், மதுரை

இருமாத கால தையற்பயிற்சியானது 2022 ஜூன் 15 ஆம் தேதி மதுரை ஆரியூரில் தொடங்கப்பட்டது. இதில் இரு ஆசிரியர்கள் இருக்கிறார்கள். 20 பேர் பயன்பெறுகிறார்கள்.

### ▶ விரிவாக்கப்பட்டப் பகுதி திருத்தொண்டுப்பணியாளர்கள் கூட்டம்

மறைமாவட்டத்தின் விரிவாக்கப்பட்டப் பகுதிகளில் பணிபுரியும் அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகளின் கூட்டம், ஜூன் 16, 2022 அன்று விருதுநகர் ஓ கோவில்பட்டி என்னும் இடத்தில் வைத்து நடைப்பெற்றது. நிகழ்வை அருட்தந்தை பீட்டர் கிழக்கேல் அவர்கள் ஒருங்கிணைத்தார்.



### ▶ காரோடு DNN – புதுப்பிக்கப்பட்ட சிற்றாலயம் மந்திரிப்பு

காரோடு, தேவசகாயம் பிள்ளை நல்வாழ்வு நிலைய சிற்றாலயம் புதுப்பிக்கப்பட்ட நிலையில் அதன் மந்திரிப்பு, ஆயர் அவர்களால் ஜூன் 17 அன்று நிறைவேற்றப்பட்டது. பணிகள் அருட்தந்தை அஜீஷ் அட்டியில் அவர்களின் மேற்பார்வையின் கீழ் நடந்தன.

### ▶ திருத்தூதர் தோமா – ஒருநாள் கருத்தமர்வு

மறைமாவட்டத்தில் பணிபுரியும் அருட்தந்தையர் மற்றும் அருட்சகோதரிகளுக்காக, திருத்தூதர் தோமா பற்றிய ஒருநாள் கருத்தமர்வு ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டது. இந்நிகழ்வு

கல்லுவிளை, சமூக சங்க கட்டிட அரங்கில் வைத்து நடைபெற்றது. இதை அருட்தந்தை குரிக்கிலங்காட் MST அவர்கள் நடத்தினார்கள்.

### ▶ குருக்கள் நலவாழ்வு அமைப்பின் சட்டவிதிமுறைகள் வெளியீடு

மறைமாவட்ட குருக்களின் நலன் பேணும் நோக்குடன், குருக்கள் நல்வாழ்வு அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. இதன் விதிமுறைகள், 18.06.2022 அன்று, திருத்தூதர் தோமா குறித்த கருத்தரங்கின் இறுதியில் வெளியிடப்பட்டது.

### ▶ மறைமாவட்ட துறைகளுக்கிடையேயான கூட்டம்

மறைமாவட்டத்தில் இயங்கும் சில துறைகளின் இயக்குநர்களின் கூட்டமானது 23.06.2022 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு ஆயர் இல்லத்தில் வைத்து நடத்தப்பட்டது. இதில், குழந்தை ஈசோ, மிஷன் லீக், மறைக்கல்வி, இளையோர் இயக்கம், இல்வாழ்வு இயக்கம், வின்சென்ட் தே பவுல், நலவாழ்வு பணிக்குழு ஆகியவற்றின் இயக்குநர்கள் பங்கேற்றனர். ஆயர் தலைமையேற்றார். பொருளர் தந்தையும், ஆயர் செயலரும் உடனிருந்தனர்.

## இதர செய்திகள்

- மறைமாவட்ட தமிழ்வழிக் கல்வி நிலையங்களில் பணியாற்ற விண்ணப்பித்தவர்களுக்காக எழுத்துத் தேர்வு 2022 ஜூன் 6 ஆம் தேதி சூசைபுரத்தில் வைத்து நடத்தப்பட்டது. இதை அனைத்துப் பள்ளிகளின் தாளாளர் அருட்தந்தை ஜாண் பால் அவர்கள் ஒருங்கிணைத்தார்கள்.
- புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியில் கல்லூரியில் கல்வி இயக்குநராக அருட்தந்தை மைக்கிள் ஆரோக்கியசாமி SDB அவர்கள் 7.6.2022 அன்றுப் பொறுப்பேற்றார்கள்.
- நாகர்கோவில் புனித அல்போன்சா திருத்தலம், தனது திருவிழாவை ஜூலை 22 முதல் 31 வரை நடத்துகிறது.
- பீகார் புக்ஸர் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை ஜோகேஷ் அவர்கள், நமது மறைமாவட்டத்தில் மூன்றாண்டுகள் பணிபுரிய ஒப்பந்தத்துடன் பணி ஏற்றிருக்கிறார்.

# மறைவட்டச் செய்திகள்

## படந்தாலுமூடு

### திருஇருதய மறைவட்ட ஆலயம் – படந்தாலுமூடு

**திருவிழா:** படந்தாலுமூடு திருஇருதய மறைவட்ட ஆலயத் திருவிழா, 2022 ஜூன் 22 ஆம் தேதி திங்கட்கிழமை முதல் 26 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை வரை நடைபெற்றது. முதல் நாள் மாலை 6 மணிக்கு பங்குத்தந்தை டென்சி முண்டுநடைக்கல் அவர்கள் திருக்கொடியேற்றினார். திருவிழா நாட்களின் முதல் 5 நாட்களில் மாலை 5.30 மணிக்கு செபமாலையும், நவநாளும் 6.15 மணிக்கு ஆடம்பரத் திருப்பலியும் நிறைவேற்றப்பட்டது. ஜூன் 25 ஆம் தேதி ஆறாம் திருவிழாவின் நாளில் இரவு 8 மணிக்கு பக்த இயக்கங்களின் ஆண்டுவிழா நடைபெற்றது. கடைசி நாளன்று காலை 9 மணிக்கு இராசை திருப்பலி, திருப்பவனி திருக்கொடி இறக்குதல், அன்பின் விருந்து ஆகியவை இடம் பெற்றன.

### புனித பவுல் ஆலயம் – தெற்றியோடு

**பாப்புலர் மிஷன் தியானம்:** ஓராண்டு கால தொடர் செபம் மற்றும் தயாரிப்பிற்குப் பின், பாப்புலர் மிஷன் தியானமானது, தெற்றியோடு புனித பவுல் ஆலயத்தில், ஜூன் 12 முதல் 17 ஆம் தேதி வரை நடத்தப்பட்டது. தியானத்தை அருட்தந்தை எட்வர்ட் VC



மற்றும் அருட்தந்தை லிஜோ VC ஆகியோர் வழிநடத்தினர். தியானத்திற்கான, குறுகிய கால தயாரிப்பின் அடையாளமாக, ஜூன் 5 அன்று பாப்புலர் மிஷன் தியானக் கொடியானது ஆலயத்தில் ஏற்றப்பட்டது. தொடர்ந்து குடும்பங்களிலும் கொடிகள் ஏற்றப்பட்டன.

2022 ஜூன் 5 ஆம் தேதி, மறைக்கல்வி தொடக்கவிழா, பங்குதந்தையின் தலைமையில் நடைபெற்றது.

- **புனித மார்ட்டின் டி போரஸ் ஆலயம் – கழுவந்திட்டை**

2022 ஜூன் 5 ஆம் தேதி, மறைக்கல்வி தொடக்கவிழா, பங்குதந்தையின் தலைமையில் நடைபெற்றது. அவ்வேளையில், குத்துவிளக்கேற்றுதல் மறைக்கல்வி ஆசிரியர்கள் உறுதி மொழி ஏற்றல், இறை வேண்டுதல் ஆகியவை நடைபெற்றன.

ஜூன் 12 ஆம் தேதி பங்குப்பேரவைக் கூட்டமானது நடைபெற்றது. மேலும் 26.06.2022 அன்று இளையோர் அழைக்கப்பட்டு, அவர்கள் இயக்கமாக செயல்படுவதின் அவசியங்கள் கூறப்பட்டன. இளையோர் இயக்க மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை சுமேஷ் அவர்கள் கூட்டத்தை பொறுப்பேற்று நடத்தினார். பங்குத்தந்தை ஜெஸ்டின் செறுவேலில் அவர்கள் முன்னிலை வகித்தார்.

## மஞ்சாலுமூடு

- **புனித தோமையார் ஆலயம் – முழுக்கோடு**

முழுக்கோடு புனித தோமையார் ஆலயத்தில் VPV கொண்டாட்டம் 2022, மே 31 முதல் ஜூன் 5 வரை நடைபெற்றது.

- **புனித பெனடிக்ட் ஆலயம் – பென்கிரி**

பென்கிரி புனித பெனடிக்ட் ஆலய மக்கள் 2022, ஜூன் 19 அன்று காரோடு தேவசாகயம் நலவாழ்வு இல்லத்தைச் சந்தித்து உதவிகள் வழங்கினர்.

2022, ஜூன் 26 அன்று மறைக்கல்வி மாணவ மாணவிகளின் திறமைகளை வெளிப்படுத்தும் விதமாக போட்டிகள் நடத்தப்பட்டன.

## தக்கலை–பிலாங்காலை

### புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயம் – பிலாங்காலை

ஜூன் மாதம் 24 ஆம் தேதி, ஆண்டவரின் திரு இருதய திருவிழாவின் நாளில் மாலை 6 மணிக்கு திருப்பலி மற்றும் ஆராதனை நடைபெற்றது.

2022, ஜூன் 26 ஆம் தேதி அருட்சகோதரர் டோணி தோமஸ் அவர்களுக்கு பிரியாவிடை அளிக்கப்பட்டது. 'கற்றவர்க்கு சென்ற இடம் எல்லாம் சிறப்பு' என்பது தமிழ்க்கூற்று. கடவுளின் அழைப்பை பெற்றவர் என்றால் அதனினும் தனிச்சிறப்பு. தம் துறவற வாழ்க்கை பயணத்தின் ஒரு பகுதியாக தானும் கற்று பிறருக்கு கற்பிக்க ஒரு கல்லூரி மாணவராக 3 ஆண்டுக்காலம் பங்கிலும் மறைக்கல்வியிலும் செய்த உதவிகளுக்கும் பணிகளுக்கும் அருட்சகோதரர் அவர்களுக்குப் பங்குதந்தை நன்றி தெரிவித்து அவரது பணிச் சிறக்க வாழ்த்தினார்கள். பங்கின் சார்பாகவும் மறைக்கல்வியின் சார்பாகவும் அருட்சாகோதரர் டோணி தோமஸ் அவர்களுக்கு அன்பு பரிசு வழங்கப்பட்டது.



### புனித சவேரியார் ஆலயம் – கைசாலவிளை

ஜூன் 24, 2022, ஆண்டவரின் திரு இருதய திருவிழா அன்று மாலை 6 மணிக்கு திருப்பலியும் தொடர்ந்து நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது.

### புனித மரியா ஆலயம் – தக்கலை

தக்கலை புனித மரியா ஆலயம் தொடங்கப்பட்டு 24 ஆண்டுகள்

நிறைவடைந்திருக்கிறது. அதன் வெள்ளிவிழாவை, 5.6.2022 அன்று உயர் பேராயர் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்கள் திருப்பலி நிறைவேற்றித் தொடங்கி வைத்தார்கள்.

## தூசைபுரம்

### ▶ தேவமாதா ஆலயம் – கிள்ளியூர்

24.05.2022 அன்று பங்குத்தந்தையாக அருட்தந்தை சாஜன் நெட்டப்பொங்நு அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்.

05.06.2022 அன்று திருப்பலியைத் தொடர்ந்து மறைக்கல்வி ஆண்டு தொடக்கவிழா நடைபெற்றது. குத்துவிளக்கேற்றுதல், உறுதி மொழி ஏற்றல், இறைவேண்டுதல் ஆகியவை பங்குத்தந்தை அவர்கள் முன்னிலையில் நடைபெற்றன.

04.06.2022 அன்று மறைக்கல்வி ஆசிரியர்களுக்கானக் கூட்டம் மாலை நடைபெற்றது. ஜூன் 26 ஆம் தேதி பங்குத்தந்தையின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. புதன் கிழமைகளில், திருப்பலியும் தொடர்ந்து ஆலயத்தைச் சுற்றி செபமாலை பவனியும், வெள்ளிக்கிழமைகளில் நற்கருணை ஆராதனையும் நடைபெற்று வருகிறது.

### ▶ புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை

2022-2023 ஆம் மறைக்கல்வி ஆண்டுத் தொடக்கவிழா, 2022 ஜூன் 5 ஆம் தேதி பங்குத்தந்தை முன்னிலையில் நடைபெற்றது. அன்றைய தினம் திருப்பலியின் நிறைவில், புதிதாக மறைக்கல்வி பயில ஆரம்பிக்கும் குழந்தைகளின் விரல்களைப் பிடித்து பங்குத்தந்தை முதல் எழுத்து எழுத வைத்தார். பின்னர் அவர்கள் தலைகளில் கைகளை வைத்து செபித்தார்.

ஜூன் 10, 2022 அன்று மறைக்கல்வி ஆசிரியர்கள், சுற்றுலாவாக திருவனந்தபுரம் சென்றார்கள்.

27.06.2022 அன்று பேரருட்தந்தை ஆன்டணி ஜோஸ் அவர்கள் வருகைப் புரிந்து பிளஸ் 1 படிக்கும் மாணவர்களின் தலைகளில் கைகளை வைத்து செபித்தார்.

### கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்

ஜூன் 9 முதல் 11 ஆம் தேதி வரை 3 நாட்கள் பங்கின் வருடாந்தர திருப்பயணம் நடந்தது. வாடிப்பட்டி, பூண்டி, வேளங்கண்ணி ஓரியூர் ஆகிய திருத்தலங்கள் சந்திக்கப்பட்டன.

ஆலய வைர விழாவை முன்னிட்டு ஆனக்குழி அருள்தந்தை தோமஸ் வீட்டு வேலி குன்னேல் அடிகளார் வளாகத்தில் சிற்றாலயமான கிறிஸ்து அரசர் குருசடி ஒன்று நிறுவப்பட்டது. அதனை ஜூன் 12ஆம் தேதி ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் மாலை 5 மணிக்கு மந்திரித்து திறந்து வைத்தார். தொடர்ந்து நடந்த பொதுக்கூட்டத்தில் பங்குத்தந்தை அருட்தந்தை ஜான்பால் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

ஜூன் 20ஆம் தேதி பங்குப்பேரவை கூட்டம் நடைபெற்றது. ஜூலை 3 தோமையார் தினம், ஆனக்குழி கிறிஸ்து அரசர் கிளவுஸ் பேக்கிங் யூனிட்டின் புதிய மேற்பர்வையாளர் நியமனம், ஆலய விரிவாக்க நிதி திரட்டுதல் ஆகியவைப் பற்றி விவாதம் நடந்தது.

## நித்திரவிளை

### புனித ஜார்ஜியார் திருத்தலம் – முஞ்சிறை

மறைக்கல்வி தொடக்கவிழா 2022, ஜூன் 5 ஆம் தேதி பங்களவில் தொடங்கப்பட்டது. ஜூன் 13 ஆம் தேதி பள்ளிச் செல்லும் மாணவர்களுக்காக சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலிக்குப் பின்னர் மாணவர்கள் மீது கைகள் வைத்து சிறப்பு செபம் பங்குத்தந்தையால் ஏறெடுக்கப்பட்டது. நற்கருணை ஆராதனை வியாழக்கிழமைகளில் நடைபெறுகிறது.

திருஇருதய ஆண்டவர் திருவிழா 24.06.2022 அன்று சிறப்பிக்கப்பட்டது.

## மஞ்சாலுமூடு

### திருஇருதய ஆலயம் – பள்ளிக்கோணம்

பள்ளிக்கோணம் திருஇருதய ஆலயத்தில் பாப்புலர் மிஷன் தியானம்,

ஜூன் 20 ஆம் தேதி முதல் 24 ஆம் தேதி வரை நடைப்பெற்றது. அருட்தந்தையர் எட்வர்ட் VC மற்றும் லிஜோ VC ஆகியோர் தியானத்தை நடத்தினர்.

**தகவல் சேகரிப்பு: திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா, திருமதி, ஷைலா | மெரின் சுஜித்**

## தென்காசி மறைத்தளம்

- **திருத்தொண்டுப் பணியாளர்கள் கூட்டம்**

தென்காசி மறைத்தளத்தில் பணியாற்றும் அருட்தந்தையர்கள் மற்றும் அருட்கன்னியர்களுக்கான கூட்டம் மற்றும் ஆயர் சந்திப்பு 2022, ஜூன் மாதம் 22 ஆம் நாள் பண்பொழி டொரேத்தியன் கன்னியர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. திவ்யநற்கருணை ஆராதனையுடன் கூட்டம் தொடங்கியது. கூட்டத்தில் பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற, அருட்சகோதரி கொளேட் அவர்களுக்கு நன்றியும் வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது.

## வரவிருக்கும் நிகழ்வுகள்

| | |
|---|---|
| திருத்தூதர் தோமா திருவிழா | - ஜூலை 03 |
| குருக்கள் தியானம் மற்றும் கூட்டம் | - ஜூலை 06 |
| இளங்குருக்களுக்கான தொடர் பயிற்சி | - ஜூலை 14 |
| மறைமாவட்ட துறைகளின் கூட்டம் - II | - ஜூலை 15 |
| மாதர் சங்கம், தொடக்க விழா | - ஜூலை 17 |
| மறைக்கல்வி ஆண்டுவிழா | - ஜூலை 17 |
| அல்போன்சா நடைப்பயணம் | - ஜூலை 23 |
| முதியோர் தினம் பங்குக் கொண்டாட்டம் | - ஜூலை 24 |
| புனித அல்போன்சா திருவிழா | - ஜூலை 28 |
| புனித அல்போன்சா மறைமாவட்ட அளவிலான கொண்டாட்டம் | - ஜூலை 31 |

| BIRTHDAY OF REV. FATHERS- JULY - 2022 | |
|---|---|
| Fr. Kurian Mathew Koipuram | 07 |

| FEASTDAYS OF REV. FATHERS - JULY - 2022 | |
|---|---|
| Fr. Robins Kuzhikodil | 03 |
| Fr. Thomas Powathuparampil | 03 |
| Fr. Jiji Koipuram | 03 |
| Fr. Thomas Sathianesan | 03 |
| Fr. Ajeesh Attiyil | 03 |
| Fr. Abin Poovathummoottil | 03 |
| Fr. Thomas Jebanesh | 03 |
| Fr. Rajesh Vayalumkal MCBS | 15 |
| Fr. Toji Parampilparampil | 25 |
| Fr. Jacob Aiyammatra | 25 |
| Fr. Vinod Kanakalil | 25 |
| Fr. Anoop Karingadu MCBS | 25 |

## BISHOP'S ENGAGEMENTS JULY 2022

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Fri | 08.00 pm | UAE, Sharjah: Confirmation Holy Qurbana |
| 2 | Sat | 10.00 am | UAE, Sharjah: Dhukrana Holy Qurbana |
| 3 | Sun | 11.00 am | UAE, Al Ain: Dhukrana Holy Qurbana |
| 4 | Mon | 12.00 am | UAE >> Trivandrum |
| 5 | Tue | 07.30 am<br>02.30 pm | Trivandrum >> THUCKALAY<br>Bishops House: Meeting with Priests \| SJSM Sisters |
| 6 | Wed | 09.30 am<br>04.00 pm | Recollection and Priest conference<br>Bishop's House: Meeting with College Staff |
| 7 | Thu | 06.00 pm | Muzhucode: St Thomas Feast Day Holy Qurbana |
| 8 | Fri | 10.00 am<br>07.00 pm | Soosaipuram: St Alphonsa College GB meeting<br>Changanaserry: Jubilee of Fr Thomas Thekkethalakal |
| 9 | Sat | 10.00 am<br>01.00 pm | Thodupuzha: First Holy Communion Holy Qurbana<br>>> TNBC, Vellankanni |
| 10 | Sun | 09.00 am | Vellankanni: TNBC annual meeting |
| 11-12 | Mon-Tue | 07.00 am | Vellankanni: TNBC Annual meeting |
| 13 | Wed | 10.00 am | Vellankanni: TNBC Meeting with Nuncio |
| 14 | Thu | 09.30 am | Sangamam: On going formation program for Junior priests |
| 15 | Fri | 10.00 am<br>2.30 pm | Bishop's House: Meeting with SD provincial<br>Bishop's House: Department |

| | | | |
|---|---|---|---|
| 16 | Sat | 02.00 pm | Kalluvilai: Mathiru Jyothis inauguration |
| 17 | Sun | 09.00 am<br>02.30 pm | Vavarai: Holy Mass<br>Kalluvilai: Catechism annual day celebration |
| 18 | Mon | 09.30 pm<br>03.00 pm | Curia Meeting<br>Padanthalumoodu: Cathedral Construction Committee meeting |
| 19 | Tue | 10.00 am | Kottaram: Silver Jubilee Holy Qurbana |
| 20 | Wed | 09.30 am<br>02.30 pm | Ernakulam: Death anniversary Holy Qurbana<br>>> Poondi: CHAT Meeting |
| 21 | Thu | 09.00 am<br>05.00 pm | Poondi: CHAT Silver Jubilee celebration<br>>> Chennai |
| 22 | Fri | 08.30 am | Chennai >> Kolkata |
| 23 | Sat | 10.00 am | Krishnanagar: Episcopal ordination of Fr. Nirmal Gomes SDB |
| 24 | Sun | 02.30 pm | Meeting with Bishop of Bhagalpur |
| 25 | Mon | 11.00 am | Meeting with Bishop of Ranchi |
| 26 | Tue | | Ranchi >> Trivandrum >> Thuckalay |
| 27 | Wed | 09.30 am | Curia Meeting |
| 28 | Thu | 11.00 am<br>08.00 pm | St. Alphonsa Feast Day celebration with School Children<br>St. Alphonsa feast with the invited Bishops |
| 29 | Fri | | Recollection Day |
| 30 | Sat | 09.00 am | Mankarai: Feast Day Holy Qurbana |
| 31 | Sun | 09.00 am<br>06.30 pm | St. Alphonsa Feast Diocese Level Holy Qurbana<br>Mankarai: Golden Jubilee Public meeting |

**Rev. Fr. Robin Jose, Bishop's Secretary**

VPV
Muzhucode
May 31-June 5, 2022



Chappel Blessing
DNN Karode
17.6.2022





Tenkasi Mission Meet
S.H. Convent, Panpoli
22.6.2022



Popular Mission
Retreat
Thettiyode,
12-17.6.2022

Health Commission
Meeting, Kalluvilai
7.6.2022



Vincent de Paul
Seminar for Youth
Soosaipuram
26.6.2022



Kuzhandai
Iso Iyakkam,
Inauguration
Kalluvilai, 4.6.2022



Parish feast
Sacred heart Church
Padanthalumoodu
20-26.6.2022



**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570